# ஸ்ரீ மாதா புவனேஸ்வரி பக்தி மாலை



பக்தியுடன் வழங்கும்

**K. வள்ளிநாயகம்**
சென்னை-11
Cell : 9940271554

01-01-2019

Classic Prints
25513522





# ஸ்ரீ மாதா புவனேஸ்வரி பக்தி மாலை

## காப்பு

ஞானப் பழங்கொண்டு ஈசன் அருள்பெற்று
ஞால முதற்பொரு ளான
ஆனை முகன் பார்க்கின் அந்தமும் முதலாகும்
அனைத்திலும் ஜெயமாகு மன்றோ !
தேனின் தமிழ்க்கவிதை தேவியின் அடிசாற்றும்
சிறியேனின் முயற்சிக்குத் துணையாய்
பானை வயிற்றோனைப் பணிகிறேன் பாடலின்
பனுவலைச் செய்விப்பா னவனே !

1

ஆர்வந்து கேட்டாலும் அளிக்கின்ற வள்ளல்கள்

அணிசெய்யும் புதுகை நகரில்

ஊர்கொண்ட உமையாளே புவனேஸ்வரி உன்னையே

உள்ளத்தில் வழுத்தி மகிழ்வேன்

நேர்கொண்ட நெஞ்சிலே நிலைக்கின்ற அம்பிகே

நேர்கின்றவை யாவும்நின் செயலே

தேர்கொண்டு திக்கெட்டும் வீதிவலம் வரும்போது

தேன்கவியப் பூச்சொரியும் மழையே !

2

சுகப்பண் ணிசைப்பதற்கு சுருதியே நீயென்ற

சூத்திரம் மறந்து போக

இகத்தின் உறவுகளில் என்னைப் பறிகொடுத்து

இடிவாங்கி இதயம் நோக

அகப்புண் மருந்துக்கு அன்னையுன் வாசலில்

ஆற்றாமை தள்ள விழுந்தேன்

நகக்கண் மணிபிதுங்க நான்தொடுத்த மாலையிது

நாயகியே ஏற்றுக் கொள்க !



3

பூக்கின்ற மலர்யாவும் புகழ்பேசும் பாதத்தை

பூஜிக்க வரமொன்று தா

சேர்க்கின்ற இருவினையும் சிதறவே அருள்கின்ற

திருவடியை நாடவரம் தா

ஈர்க்கின்ற மாயைக்குள் இழியாமல் தடுக்கின்ற

எழிற்பாதம் சேரவரம் தா

ஏர்க்காலில் குற்றுயிராய் இடர்கின்ற ஏழைக்கு

எஞ்ஞான்றும் பாதமலர் தா!

4

சிவிகையில் வருவார்க்கும், தெருவிலே நிற்பார்க்கும்

தேவியுன் சன்னதித் திறந்திருக்கும்

கவிதையில் சொல்வார்க்கும் கல்லாத மூடருக்கும்

காலடித் திருவருள் சுரந்திருக்கும்

புவிமிசை வாழ்கின்ற உயிர்க்குறை எல்லாமும்

புவனாவின் கண்பட நிறைந்திருக்கும்

குவிகரத் தோடுநான் குழறுமிப் பாடல்கள்

கோவில்மணி ஓசையில் எதிரொலிக்கும் !

5

நந்தவனம் சொரியும்மலர் நாயகியுன் பூஜைக்கு
நயந்துநான் இயற்றும் பாடல்
சந்தமனம் தருவதனால் தாயுந்தன் சன்னதிக்கு
சந்தணமும் குங்குமமும் பன்னீரும்
சொந்தமணம் தோற்கவே உந்தன்மணம் பெற்றந்த
சொந்தத்தில்தம்மை இழக்கும்
நொந்துதினம் வாடுகின்ற பக்தனெனை நீநோக்க
நொறுங்கியவை செப்ப மாகும் !

6

ஆர்த்துவரும் கவிதைக்குள் அர்த்தமுள்ள தத்துவமாய்
அமைந்திருக்கும் உனது வடிவம்
சீர்த்த நகிற் காம்புக்குள் சேர்ந்திருக்கும் அமுதாகச்
செறிந்திருக்கும் உனது கருணை
பார்த்தவிழி பார்த்திருக்க பாராதோர் தமை ஈர்க்கும்
பான்மையது உனது அழகு
கூர்த்தமதிப் பாவலர்கள் கொண்டாடப் புதுகையிலே
குடிபுகுபுவ னேசு வரியே !



7

நேசர்மனத் துறைபவேளே நீசருக்கும் அருள்பவளே
நெஞ்சத்தைத் கோவி லாக்கி
மாசறுத்த பேர்விழிமுன் திருநடனம் புரிபவளே
மானுடம் புரக்கவந்த மலைமகளே
தாசர்கலி நீக்குகின்ற தாட்சாயணி திரிசூலி
தாமரைக் கண்ணி பவானீ
வாசமலர் நின்பாதம் காணாது வாடினேன்
வாவா வந்தென்னை ஆண்டருளேன் !

8

எதுகை மோனைக்குள் கவியெழுதி என்னுள்ளே
இறுமாந்து இருந்த போது
எதுபொய் எதுமெய் என்கின்ற ஞானத்தை
இதமாகச் சொன்ன உமையே
இதுசெய் என்றுதமிழ் அடி யெடுத்துக் கொடுத்து
என்பாடற் பொருளான உனையே
புதுகை நகர்தன்னில் புவனேஸ்வரி எனபக்தர்
பூஜிக்க வருகின்றார் இலையோ !

9

ஆத்திரம் கண்களை மறைக்கின்ற போதுநான்
அன்பர்கள் மனம்நோகச் செய்தேன்
பாத்திரம் அறிந்துபின் கொடுக்காத மடமையை
பசிக்கின்ற போதுதான் உணர்ந்தேன்
யாத்திரை முடியுமுன் இடறியுன் பாதத்தில்
இன்றுநாள் விழுந்ததால் தான்
சூத்திரம் உன் நாமம் சோகத்தை மாற்றுமெனும்
சூட்சுமம் புரிந்து கொண்டேன் !

10

கற்றறிந்த மனம்பூத்துக் காய்த்து உலகுக்காய்
கனிகின்ற உயர்வுதனைத் தேடலின்றி
சிற்றின்பச் சேற்றின்மேல் தெறிக்கும் சிந்தனையை
சிறிதேனும் திருப்புகின்ற சித்தமின்றி
தொற்றியதே பிடிப்பாகத் தொங்குகிற பேதையனை
தொட்டின்று கடரேற்றித் தூண்டிவிட்டு
வற்றாத திருவருள வந்திருக்கும் புவனேஸ்வரி
வாழுவது புதுகையெனும் திருநகரே !





துயிலாத என்மனம் தோற்காத ஆசைகள்
தொடர்கின்ற பழிபா வங்கள்
பயிலாத புலைநாக்குப் படியாத திமிருடல்
பண்படும் நாளெந்த நாள் ?
குயிலாகக் கூவியுன் குளிர்கமல பாதத்தில்
குடியேறு நாளு மென்னாள் ?
கயிலாய மலையுறையும் காதலனின் மனமுறையும்
கன்னிபுவ னேசு வரியே !

12

பிறந்ததால் பெற்றோர்க்குக் கடன்பட்டேன், வாய்திறந்து
பேசியதால் உறவோர்க்கு முடன்பட்டேன்
இருந்ததால் பூமிக்கப் பற்றானேன், நட்புக்கு
ஏங்கியதால் நிம்மதியை விற்றானேன்
கடமையால் மடந்தைக்கு உற்றானேன், சம்சார
சாட்சிக்கு மகவென்றும் பெற்றானேன்
மடமையால் சேமித்த மாயா உறவுகளை
மாற்றவுன் பாதம் பணிவேன் !

13

அச்சத்தில், ஆர்வத்தில் அளிக்கின்ற இன்பத்தில்
ஆகாயம் தொடும் வேகத்தில்
இச்சத்தில், இகழ்ச்சியில் எனையாளுங் காமத்தில்
இயலாத இரக்க உணர்வின்
உச்சத்தில், கிளர்ச்சியில் உதவாத நெஞ்சத்தின்
உழற்சியில் கரைந்து போக
மிச்சத்தில் இருக்கின்ற மிருகத்தை அடக்குகிற
மெல்லியலே புவனேஸ்வரியே !

14

தம்மை மறந்தாரை தாம்மறக்க மாட்டாது
தவிக்கின்ற நெஞ்சு தந்தாய்
பொம்மை போலென்னை ஆட்டுவார் கையிலே
போயென்னை மாட்டி வைத்தாய்
இம்மை மறுமைக்கு இடையிலே ஊசலாய்
இன்னுயிரை ஆட விட்டாய்
நன்மை தீமையெனும் இருவினை அறுக்கவோ
நானுன்னைத் தேட விட்டாய் ?



15

சாவிக்குள் மணிதேடித் தவிக்கின்ற மனிதமனம்
சலிப்புக்குள் உழன்று போகும்
காவிக்குள் இருப்போர்க்கும் காதலில் வாழ்வோர்க்கும்
கடிவாளம் உனது நாமம்
சோழிக்குள் முத்தாட, ஜோதிக்குள் நிழலாட
ஆவிக்குள் அமர்ந்த உமையே
ஆழிக்கு மேல்துயில் மாலவன் தங்கையே
அமைதிக்கு அச்சாரம் தா !

16

சென்ற நாள் சென்றபின் சேர்ந்தநாள் வணங்காது
சீர்கெட்ட மனித னாகி
வென்றநான் வென்றவை வேறல்ல மண்ணோடு
வீழ்கின்ற பொருள்களே தான்
கொன்றவாள் பாவங்கள் கூடவரும் என்பதனை
கூசாமல் மறந்த பதரை
குன்றுபோல் தழுவி குளிர்வித்த உன்பாதம்
கொண்டுவிழி நீரில் நனைப்பேன் !

17

வம்புசொல் உலகத்தில் வாய்மையின் முதற்கொண்டு
வாழும்வகை தெரியாத தால்
அம்புசொல் துளைத்தகம் சல்லடைக் கண்ணாக
ஆலயம் வந்து விழுந்தேன்
அன்புசொல் வாருக்கு ஆட்செய்ய ஆசைதான்
ஆனாலும் அன்ப ரில்லை
நம்பிசெல் வாருக்கு எல்லையுன் பாதங்கள்
நடைபாதை திருநா மங்கள்!

18

தேகத்தீ உயிரகலின் அணையும் எனைவாட்டும்
மோகத்தீ அணைவதென்னாள் தேவீ ?
யாகத்தீ நெய்சொரிய வளர்வதுபோல் நேசத்தீ
யாசிக்க யாசிக்க எரிக்குதம்மா !
சோகத்தீ சுட்டாலும் தாகத்தீ அடங்காமல்
துடிக்கின்ற அடியேனை ஈசனிட
பாகத்தீ ஆட்கொண்டு குளிர்விப்பாய் புதுகைஎனும்
பதிவாழ்புவ னேசு வரியே !



19

சதைக்குப் பசியெடுத்து சதைதேடி ஓடுகின்ற
சரீரம் சாட்சி யாக
விதைக்கும் நிலமின்றி விருட்சமாய் வளர்கின்ற
வெறுமகம் பாவம் மீற
உதைக்கும் பந்துபோல் எதிர்க்கின்ற ஆசையின்
உருவமிப் பிறவி மாற
வதைக்கும் சாவையும், வருகின்ற பிறப்பையும்
வடித்தென்னை ஆட்கொள் எம்மா!

20

இனிமையின் துணையென்று எண்ணியது மண்குதிரை
இவன்பயணம் நட்டாற் றிலே
தனிமையின் பாலையில் தடுமாறு மிவன்கால்கள்
தாகநீர் முட்கொம் பிலே
முனிவரைப் பின்பற்றி முக்தியைத் தேடவா
முனைந்தபின் குடும்பத் திலே
நனைத்துபின் சுமக்கின்ற நலிந்தவன் ஆத்மாவை
நாடிநீ கரையேற் றம்மா!

21

மனச்சிக்கல் விழுந்தபின் மாற்றுண்டோ அம்பிகே
மன்றாடித் தினம் தேய்கிறேன்
குணம்சுக்கல் சுக்கலாய் கோபத்தில்நொறுங்கிவிட
கொள்கையிலும் குலைந்து போனேன்
தினம் சிக்கல் தொடர்வதால் நின்புகழ் தொடர்ச்சியாய்
சிந்திக்கும் ஆற்றல் குறைந்தேன்
சுனைப்பக்கம் புதுகையில் சுடராக எழுந்திருக்கும்
சுந்தரியே மாயை மாற்று!

22

உயிர்சுமக்கு முடல்பதற உளம்குமைந்து வாய்கதற
உச்சவிதிக் கோடுஉள் ளாடுவதோ
வயிரதற்குச் சோறிட்டு வாழ்வதற்கு நேரிட்ட
வசையான பிறவியினுங் கூடுவதோ
பயிர்வளரும் நிலத்தினிலே களைவளரு வதைப்போல
பக்தியினைப் பற்றொன்று மீறுவதோ
துயில்கலைத்து சுகமுக்தி முத்தமிட நீயிருக்க
சொந்தமென யாரை நான் தேடுவதோ!



23

அனுபவம் ஆயிரம் ஆனாலும் அதன்சுவடு
ஆத்மாவில் பதிய வில்லை
பனுவலில் மூழ்கியும் படித்தவை பயணத்தின்
பாதிக்கும் வருவ தில்லை
இனிவரும் நாட்களை சந்திக்க செல்வத்தால்
இயலுமா என்றா லில்லை
அனைவரும் சுழல்கின்ற வட்டத்துள் எனைவைத்து
ஆட்டும்புவ னேசு வரியே!

24

பொன் வேண்டேன் பொருள் வேண்டேன் புகழ்வேண்டேன்
எஞ்ஞான்றும் அருள் வேண்டி அண்டிநிற்பேன்
உன்னோடு நான் கொண்ட பக்திபோதும்
உள்ளத்தால் பாடுகின்ற பாடல்போதும்
தென்நாட்டின் சிவன் கொண்ட பார்வதியே
சீர்மிகுந்த புதுகைவாழ் புவனேஸ்வரியே
பண்ணோடு இசைக்கின்ற தமிழ் அமுதை
பருகுவோர் பயன்பெற்று வாழ்க ! வாழ்க!

25

பார்வை தரும் செல்வாக்கு பதவிதரும் உன்நோக்கு
நேர்மைதரும் உன்நாசி நேயம்தரும் உன்னிதழ்கள்
ஆசிதரும் கைத்தலங்கள் ஆக்கந்தரும் உன்னழகு
பாசமிகு குழந்தைபோல் பவனிவரும் அம்பாளே
பாடல்களை சம்ர்ப்பித்து பாதங்களை வணங்குகிற
தேடல்மிகு பக்தன்யான் தேடியதை அடைவேனா
தோடுடைய செவியனொடு தோள்சேர்ந்து நிற்பவளே
பீடுபெற என்வாழ்க்கை பெய்திடுக அருள்மழையை!

26

மண்மாயைப் பொன்மாயைப் பெண்மாயை என்கின்ற
மாயைகள் இருப்ப தெல்லாம்
என்மாயை என்றொன்று இருப்பதால் தானன்றோ
கண்மாயப் பார்வை காணின்
உன்நேயத் தோற்றமும் மாயையே என்றாகும்
உண்மையுங் கூடப்பொய் யாகுமே
என்மாயை யாகவே நீயறு உன்னோடு
என்றென்றும் ஜோதி யாக!



27

தேன்சார் சுவையறிய நாவேண்டும் தென்றல்
சிலிர்க்கின்ற சுகமறிய மெய்வேண்டும்
வான்மேற் தாரகையின் வீச்சறிய விழிவேண்டும்
வழிதெரிய ஞானத்தின் துணை வேண்டும்
நாண்சேர் இசையறிய செவிவேண்டும், வேண்டும்
நாசியது நறுமணத்தை அனுபவிக்க
நான்யார் என்றுணர நீவேண்டும் உரைகல்லாய்
நாயகியே புதுகைபுவ னேஸ்வரியே !

28

உற்றுதுயர் ஆற்றுதற்கும் ஒளிவில்லா என்னன்பை
உவப்போடு எதிரொலித்துக் காட்டுதற்கும்
குற்றங்கள் திருத்துதற்கும் குணம் போற்றிச் சொல்லுதற்கும்
கொண்டபணி ஊக்கு வித்து நாளும்
வெற்றியிலும் புகழ்ச் சியிலும் வீழாது நடைபோட
வெள்ளியாய் திசைகாட்டி நிற்பதற்கும்
வற்றாத அருள்வெள்ள அலையாடும் சாகரமே
வருவாய்நீ வணங்கி மகிழ்வேன்!

29

விருந்தாக வருவோர்க்கு வேண்டிய அன்னமும்
வெறுங்கை என்னாது செல்வமும்
மருந்தாக உன்நாமம் நினைக்கின்ற உள்ளமும்
மழையென்றும் தவறாத பருவமும்
சரிந்தாலும் எழுந்துவிடும் சலிக்காத தன்மையும்
சதுரங்க மாடு முலகை
புரிந்துகொள் பக்குவமும் வரித்தென்னை ஆட்கொண்ட
புவனேஸ்வரி அருள்வரங்க ளாகும் !

30

பூப்பறியா மகளின்று கருவுற்றாள், ஒளிவீசும்
பொன்னறியா மகனின்று திருவுற்றான்
யாப்பறியா நெஞ்னிலும் கவியாகி நீ ஒலிக்க
இவன்பாடும் நிலைபெற்றான், இனிப்போடு
மூப்பறியா தமிழினிலே மூச்சடக்கி உன்னருளை
முகந்துவந்தான் தன் துயரும் விண்டுவைத்தான்
மாப்பெரிய புதுகைநகர் மாட்சிமையாம் புவனேஸ்வரி
மாதாவின் பாதங்கள் போற்றி ! போற்றி !